4. கவன ஈர்ப்பு.

பல்லடம், அவிநாசி வட்டங்களில் விளைச்சலின்மையும் கடன்கள் வசூல் ஒத்திவைப்பும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 41-வது விதியின் கீழ் உள்ள கவன ஈர்ப்புத் தீர்மானம். திரு. துரைசாமி, திரு. பூபதி, திரு. குமாரசாமி, திரு. பரமசிவம் ஆகிய நால்வரும் ஒரே காரியத்தைப் பற்றி கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது அவர்கள் தீர்மானத்தைப் படிப்பார்கள்.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் அவசரமும், பொது முக்கியமும் வாய்ந்த காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரு கிறேன்.

கோவை மாவட்டம், பல்லடம், அவிநாசி ஆகிய வட்டங்களில் பருவ மழை தவறிய காரணத்தால் பயிர் விளைச்சலின்றியும், குடி தண்ணீர் இல்லாமலும் கால்நடைகளைப் பராமரிக்க முடியாமல் மக்கள் அவதியுறுவ தால், அரசினர் வழங்கிய கடன்களை ஓராண்டு காலம் ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் பற்றிய அவசரமும் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. பி. என். பரமசிவ கவுண்டர் : தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின 41-வது விதியின் கீழ் அவசரமும், பொது முக்கியமும் வாய்ந்த காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

கோவை மாவட்டம், பல்லடம், அவிநாசி ஆகிய வட்டங்களில் பருவ மழை தவறிய காரணத்தால் பயிர் விளைச்சலின்றியும், குடிதண்ணீர் இல்லாமலும் கால்நடைகளைப் பராமரிக்க முடியாமல் மக்கள் அவதியுறுவ தால், அரசினர் வழங்கிய கடன்களை ஓராண்டு காலம் ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் பற்றிய அவசரமும் பொது முக்கியமுமான காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பூபதி அவர்கள் இருப்பிடத் தில் இல்லை. திரு. குமாரசாமி அவர்கள், சொல் வேற்றுமை இல்லை யென்றால் படிக்க வேண்டியதில்லை. சொல் வேறுபாடு இருக்குமானால் படியுங்கள்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, தீர்மானத்திலே சர்க்கார் வழங்கிய கடன்கள் என்று குறிப்பிட்டிருப்பதிலே, கோவாப ரேடிவ் கடன்களையும் சேர்த்து வசூலிப்பதை ஒத்தி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, கோயம் புத்தூர் மாவட்டத்தின் சில பகுதிகளில் பருவ மழை பொய்த்துவிட்டதன் காரணமாக, புன்செய்ப் பயிர்கள் சாவியாகிவிட்டன. பாசனக் கிணறுகளில் நீர் கிடைப்பது அரிதாகிவிட்டதால் மிகப் பெரும் பகுதிகளில் தோட்டப் பயிர்கள் கூடப் பாதிக்கப்பட்டுள்ளன. நீர்த் தேக்கங்களிலிருந்தும் வாய்க்கால்களிலிருந்தும் பாசனம் பெறும் வசதியுடைய நன்செய்ப் பயிர்கள் ஓரளவிற்கு நன்னிலையில் உள்ளன. ஆனால், சிறு ஆறுகளின் வாய்க்கால் பாசன ஏற்பாட்டின் கீழுள்ள நன்செய்ப் பயிர்கள் பெரும்பாலும் வாடிவிட்டன. பெரும்பான்மையான பாசன ஏரிகளுக்கு நீர் கிடைக்க வில்லை. நடப்புப் பசலியில் கடன் தவணைகளைச் செலுத்துவது கடின மென்று உழவர்கள் உணர்கின்றனர். கடன் தவணைகளையும் நிலவரி யையும் மெதுவாக வசூல் செய்யுமாறு சார்நிலை அதிகாரிகளுக்குக் கலெக்டர் கட்டளை பிறப்பித்துள்ளார்.

பல கிராமங்களில் குடி நீர்ப் பஞ்சமும் ஏற்பட்டுள்ளது. ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் ஆகியவற்றிடம் உள்ள நிதியைக் கொண்டு குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துமாறு கலெக்டர் கட்டளை பிறப்பித்துள்ளார்.

மாவட்டம் முழுவதிலும் உள்ள பருவ நிலைமை குறித்து கலெக்டர் இன்னும் மதிப்பீடு செய்யவில்லை. மதிப்பீடு செய்து முடித்ததும் குறிப்பான செயற்குறிப்புகளை அனுப்பி வைப்பதாக கலெக்டர் உறுதி கூறியுள்ளார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மற்றொரு கவன ஈர்ப்புத் தீர்மானம். திரு. எஸ். ராமசாமி நாயுடு அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், பேரவையின் அனுமதியுடன் அந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது.

5. அரசினர் மசோதா.

தமிழ்நாடு 1968-ம் ஆண்டு இனங்கள் (துணை) திருத்த மசோதா.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தமிழ்நாடு 1968-ம் ஆண்டு இனங்கள் (துணை) திருத்த மசோதாவை அறிமுகப்படுத்த நான் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தமிழ்நாடு 1968-ம் ஆண்டு இனங்கள் (துணை) திருத்த மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மசோதா அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

6. 1968-69-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

கோரிக்கை எண் 17—மீனளம்

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 17—மீனளம் என்ற தலைப்பின் கீழ் ரூ.1,21,53,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

Dr. H. V. HANDE : Sir, to discuss policy—I move the following cut motion :—

'That the allotment of Rs. 1,21,53,800 under Demand No. 17—Fisheries be reduced by Rs. 100.'

Thiru K. RAMAMOORTHY : Sir to discuss policy with special reference to the improvements to the Cuddalore Port—I move the following cut motion :—

'That the allotment of Rs. 1,21,53,800 under Demand No. 17—Fisheries be reduced by Rs. 100.'